UNDER SECTION 173 BNSS

BNSS பிரிவு 173-ன் கீழ்

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~)

(கு.ந.வி.தொ.பிரிவு ~~154~~ இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167245

03/AC/2026

1. District : மாவட்டம் கரூர் PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 10.06.2026

2. (i) Act சட்டம்: PREVENCTION OF CORRUPTION Sections பிரிவுகள்: 7, 7 A/W 12

(ii) Act சட்டம்: ACT 1988 [AS AMENDED IN Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: 2018] AND BNSS, 2023. Sections பிரிவுகள்: 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 04.06.2026 Date to : நாள் வரை 15.30 மணிமுதல்

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 20.45 மணி வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.06.2026 Time : நேரம் 15.00 HRS.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.06.2026 Time : நேரம் 15.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 45 கி.மி. கிழக்கு குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம் இனாம் கரூர் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. மணிவண்ணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெரியசாமி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1969 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் (g) Address : முகவரி நெடுஞ்சாலைகள் UNIT: 3 (இனாம் கரூர்) கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. A. நடராஜன், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், இனாம் கரூர் மாவட்டம்.

2. திரு. P. செல்லமுத்து S/o பிச்சை, க.எண்: 8/45 B வைகை நல்லூர் தெற்கு தெரு, வையாபுரி (வடக்கு புதூர்), இனாம் கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தரப்பட்டுள்ளது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ஆ.அமலராஜன் Rank ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS ஊ.த.க.மாவட்ட குற்ற.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/6/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

10/06/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.06.2026 AT 16.00 HRS

Name: பெயர் A.அமிர்தரோஸ் கையராகா

Rank: நிலை .....No. எண் .....

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊ.த.க.மாவட்ட குற்ற.

Attachment to Column 12 of FIR in Karur V & AC Cr. No. 3 / AC / 2026 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 of BNSS, 2023.

ஐயா, பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

எதிரிகள்

1) திரு.அ.விஜயன், வயது 45/2026,
த/பெ அங்கமுத்து,
சார்பதிவாளர், குளித்தலை,
கரூர் மாவட்டம்.

2) திரு.பி.செல்வம், வயது 43/2026,
த/பெ பிச்சைபிள்ளை,
8/45 பி வை.புதூர், (வடக்கு புதூர்),
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம். (தனி நபர்)

கரூர் மாவட்டம், குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில், தொடர்பில்லாத தனி நபர்கள் பத்திர எழுத்தரின் உதவியாளர் மற்றும் சாட்சிகள் என்ற பெயரில் பொதுமக்களிடமிருந்து அளவுக்கு அதிகமாக பணத்தை லஞ்சமாக வசூலித்து அதனை குளித்தலை சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் வீட்டிற்கு செல்லும்போது கொடுத்து அனுப்புவதாக நம்பத்தகுந்த ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் 04.06.2026-ம் தேதி 15.30 மணிமுதல் 20.45 மணி வரை நடத்திய திடீர் இணை ஆய்வின் அடிப்படையில் திரு.பெ.மணிவண்ணன், தனி வட்டாட்சியர் (நி.எ.), நெடுஞ்சாலைகள் யூனிட் 3, கரூர் மாவட்டம் 04.06.2026-ம் தேதி 23.00 மணிக்கு அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களிடம் தக்க அறிவுரை பெற்ற பின்னர், இன்று 10.06.2026-ம் தேதி 15.00 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 03 / AC / 2026 பிரிவு 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 மற்றும் பிரிவு 106 of BNSS, 2023-ன் கீழ் மார்ஜினில் கண்ட 2 எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.பெ.மணிவண்ணன், தனி வட்டாட்சியர் (நி.எ.), நெடுஞ்சாலைகள் யூனிட் 3, கரூர் மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள் : 04.06.2026-ம் தேதியன்று குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்ட போது கைப்பற்றிய அனாமதேய பணம் ரூ.90,000/- மற்றும் ஆவணங்களை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - சம்மந்தமாக. பார்வை : திடீர் இணை ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 04.06.2026. இன்று 04.06.2026-ம் தேதியன்று நான் பணியில் இருந்த போது திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.கந்தசாமி அவர்கள் செல்போனில் தொடர்பு கொண்டு கரூர் ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள ஒரு அரசு சாட்சி தேவைப்படுவதாகவும், தற்போது தான் மற்றொரு அலுவலில் இருப்பதால், என்னை கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்துக்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறும் கேட்டுக் கொண்டதன் பேரில், நான் மதியம் சுமார் 02.00 மணியளவில் காவல் துணை கண்காணிப்பாளர் அறிக்கை செய்தபோது அவர் என்னிடம் கரூர் மாவட்டம், குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் பத்திரப்பதிவு மற்றும் ஏனைய பதிவுகளுக்காக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் பத்திர எழுத்தர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் மூலம் லஞ்சமாக பணம் வசூல் செய்து வருவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் மேற்குறிப்பிட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளும்போது அரசுத்தரப்பு சாட்சியாக உடனிருக்குமாறு சொன்னதன் பேரில், தங்கள் காவல் குழுவினருடன் நானும் இணைந்து, மதியம் சுமார் 14.15 மணியளவில் நிலையம் விட்டுப் புறப்பட்டு, சுமார் 15.00 மணிக்கு கரூர் - திருச்சி சாலையில் குளித்தலை காவல் நிலையத்திற்கு எதிரே உள்ள குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தின் அருகே ஆங்காங்கே மறைவாக நின்று கண்காணித்த போது வெளி நபர்கள் மற்றும் புரோக்கர்களின் நடமாட்டம் அதிகமாகத் தெரிந்தது. எனவே, மாலை சுமார் 15.30 மணிக்கு மேற்படி அலுவலகத்தின் உள்ளே சென்று, அலுவலகத்தில் பணியிலிருந்த குளித்தலை சார்பதிவாளர் திரு.விஜயன் அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு, திடீர் இணை ஆய்வு 15.45 மணி முதல் துவங்கப்பட்டது. இன்று மொத்தம் 46 டோக்கன்கள் வழங்கப்பட்டதாகவும், அவற்றில் இதுவரை 24 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்குள் சர்வர் பழுதான காரணத்தால் இன்னும் 22 ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றும், ஏற்கனவே பதிவாகி நிலுவையில் இருந்த 6 ஆவணங்கள் இன்று விடுவிக்கப்பட்டதாகவும் கூறி, கணிணியில் பதிவாகியிருந்த 30 ஆவணங்களின் வரிசை எண்கள் மற்றும் அரசு கட்டணம் செலுத்தப்பட்ட விவரங்கள் அடங்கிய பட்டியலின் பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுத்தார். அதன்படி, மேற்குறிப்பிட்ட 30 ஆவணங்களுக்கும் உரிய கட்டணங்கள் மின்னணு மூலம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முன்னாள் படைவீரர் கொடிநாள் நன்கொடை தற்போது மின்னணு மூலம் வசூலிக்கப்படுவதாலும், அனைத்துக் கட்டணங்களும் மின்னணு மூலம் செலுத்தப்படுவதாலும் சார் பதிவாளர் அலுவலகத்தில் நிரந்தர கணக்கு பணம் ரூ.250/- தவிர வேறு எந்தப் பணமும் இல்லை என்று சார் பதிவாளர் தெரிவித்தார். மேலும் இன்று அனைத்து பணியாளர்களும் ஆஜரில் உள்ளதாக தெரிவித்தார். மேற்படி அலுவலக மெயின் ஹாலில் தெற்கு சுவரோரம் வடக்கு பார்த்தவாறு உள்ள கேபினில் இளநிலை உதவியாளர் திருமதி.சிவிதா என்பவரின் இருக்கையும், அதற்கு அருகே Data Entry Operetor திரு.அஜித்குமார் என்பவரின் இருக்கையும், அதனை அடுத்துள்ள கேபினில் இளநிலை உதவியாளர் திருமதி.சங்கரி என்பவரின் இருக்கையும், ஹாலின் தென்கிழக்கு மூலையில் உதவியாளர் திரு.செந்தில்குமார் என்பவரின் இருக்கையும், அதற்கு முன்புறமாக Camera

Operator திரு.அருண் ஆகியோர்களது இருக்கையும் உள்ளது. பின்னர் அலுவலகத்திலிருந்த அனைத்து அலுவலர்களிடம் அவரவர்களை அந்தந்த இருக்கைகளிலேயே அமர்ந்திருக்க அறிவுறுத்தி மேற்சொன்ன அலுவலர்களின் இருக்கை அமைந்துள்ள பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து அலுவலகத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள சர்வர் அறை, மதிய உணவு அருந்தும் அறை, கழிவறை ஆகிய பகுதிகளை ஒன்றன்பின் ஒன்றாக சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையின் போது அலுவலகத்தில் பணியிலிருந்த அலுவலர்களும் அவர்கள் வைத்திருந்த தொகையும் பின்வருமாறு : திரு.A.விஜயன், சார்பதிவாளர் ரூ.570/-, திரு.செந்தில்குமார் உதவியாளர் ரூ.140/-, திருமதி.சங்கரி, இளநிலை உதவியாளர் ரூ.50/-, திருமதி.சிவிதா, இளநிலை உதவியாளர் ரூ.870/-, திரு.அருண், கணினி இயக்குனர் ரூ.268/-, திரு.அஜீத்குமார், தகவல் உள்ளீடர் ரூ.320/-.

மேற்படி தொகைகள் குறித்து குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் 01.01.2026 முதல் பராமரிக்கப்பட்டு வரும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்தபோது இன்று 04.06.2026 அன்று காலை பணிக்கு வந்தபோது பணியாளர்கள் அனைவரும் அவரவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி தொகைகளை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது சரியாக இருந்ததால் அந்த பணம் அவர்கள் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து, சந்தேகத்திற்குரிய வகையில் அலுவலகத்தின் உள்ளே நின்று கொண்டிருந்த நபர்களை தனித்தனியாக விசாரித்தபோது, கீழக்குறப்பாளையத்தை சேர்ந்த திரு.கார்த்திக் மற்றும் மேகநாதன்இருவரும் உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு பத்திரம் தாக்கல் செய்ய வந்ததாகவும், மணப்பாறை புத்தூர் வேலநத்தம்பட்டி கிராமத்தை சார்ந்த ஆசிர்வாதம் என்பவரின் மகன் அருளப்பன் என்பவர் தனக்கு சொந்தமான நிலத்தை அதே ஊரைச்சார்ந்த சேகர் என்பவருக்கு விற்பனை செய்து ஆவண எண் 2403/2026 பத்திரம் மீளப் பெறுவதற்காக வந்ததாகவும், திருச்சி செந்தண்ணீர்புரத்தைச் சார்ந்த சங்கர் என்பவரை விசாரித்த போது தான் குளித்தலை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 2397/2026-ல் சாட்சியாக கையெழுத்திட வந்ததாகவும் தெரிவித்தனர். மேலும், கிருஷ்ணராயபுரம் ஆவண எழுத்தர் ராதாகிருஷ்ணன் என்பவரின் அலுவலகத்தில் பணியாற்றும் திரு.ராஜாராம் என்பவர் மேலகம்பேஸ்வரம் கிராமத்தை சேர்ந்த திரு.சுப்பிரமணி தனக்கு சொந்தமான விவசாய நிலத்தை விற்பனை செய்து பத்திர பதிவு மேற்கொள்வதால் அவருடன் வந்ததாகவும் தெரிவித்தார். மேற்சொன்ன நபர்களிடம் கைப்பற்றக்கூடிய வகையில் பணம் மற்றும் ஆவணங்கள் எதுவுமில்லை. மேலும் குளித்தலை சத்தியமங்களம் வை.புதூர் கிராமத்தை சேர்ந்த விவேக் என்பவரை விசாரித்தபோது தான் முசிறியில் உள்ள HDB வங்கியில் விற்பனை மேலாளராக பணிபுரிவதாகவும், இன்று தனது ஊரைச்சார்ந்த பெரியசாமி, ரமேஷ் ஆகியோருக்கு சொந்தமான நிலத்தை திருச்சியை சார்ந்த உமாசந்திரன் என்பவருக்கு விற்பனை செய்ததற்கு ஆவண எண் 2410/2026-ல் சாட்சியாக

கையெழுத்திட வந்ததாக தெரிவித்தார். அவருடைய பர்சில் வைத்திருந்த பணம் ரூ.6000/- பற்றி விசாரிக்க தனது வீட்டிற்கு பெயிண்ட் வாங்குவதற்காகவும், தனது சொந்த செலவிற்காகவும் வைத்திருந்ததாக தெரிவித்ததன் பேரில் அந்த பணத்தை திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அலுவலகத்தின் உள்ளே நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது அவரது பெயர் திரு.ராமகிருஷ்ணன் என்றும் அவர் பத்திர எழுத்தர் என்றும், இன்று வலையபட்டி ராஜ்கண்ணு என்பவர் பாலசுப்பிரமணியம், விஜய் ஆகியோருக்கு வீட்டு மனை விற்பனை செய்வதற்காக டோக்கன் வாங்கியிருந்ததாகவும், அதன் பொருட்டு அலுவலகத்தின் உள்ளே வந்ததாகவும் கூறினார். மேலும், அவர் அருகில் நின்று கொண்டிருந்த 2 பெண்களை விசாரித்த போது, அவர்களில் ஒருவர் பெயர் சங்கீதா என்றும், மற்றொருவர் பெயர் லோகேஸ்வரி என்றும், அவர்கள் இருவரும் ஸ்டாலின் என்ற பத்திரப் பதிவு எழுத்தரிடம் உதவியாளராகப் பணியாற்றுவதாகவும், இன்று மேலக்கூரப்பாளையம் கார்த்திக் என்பவரின் MOD பதிவுக்காக அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தனர். மேற்குறிப்பிட்ட நபர்களிடம் சந்தேகத்திற்குரிய வகையில் எவ்வித பணமும், ஆவணங்களும் இல்லை. மேற்குறிப்பிட்ட அனைவரும் சர்வர் திடீரென வேலை செய்யாததால், பத்திர பதிவிற்காக காத்திருப்பதாக தெரிவித்தனர். இந்த சோதனை நடவடிக்கையின தொடர்ச்சியாக சார்பதிவாளர் அலுவலகத்தின் பிரதான நுழைவாயில் அருகே அமைந்திருக்கும் பொதுமக்கள் காத்திருப்பு அறை மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஆகிய பகுதிகளில் சோதனை மேற்கொண்டபோது அங்கு கைப்பற்றக்கூடிய பணம் மற்றும் ஆவணங்கள் எதுவுமில்லை. பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தின் காம்பவுண்ட் சுவருக்கும் அலுவலகத்திற்குமிடையே உள்ள செடிகள் மற்றும் புட்கள் வளர்ந்துள்ள காலியான பகுதியை சோதனை செய்தபோது அலுவலகத்தின் தென்மேற்கு மூலையில் தரையில் புல் மற்றும் புதர்கள் நிறைந்த பகுதியில் ரூ.500/- தாள்கள் கொண்ட இரண்டு கத்தைகள் வைக்கப்பட்டு அதன் மேலே ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது. எனவே, காவல் துணை கண்காணிப்பாளர், சார் பதிவாளர் ஆகியோர் முன்னிலையில் மேற்குறிப்பிட்ட பணக் கத்தையை நான் எண்ணிப்பார்க்க ஒரு கத்தையில் 100 எண்ணிக்கை கொண்ட ரூ.500/- தாள்கள் மொத்தம் ரூ.50,000/- மற்றொரு கத்தையில் 80 எண்ணிக்கை கொண்ட ரூ.500/- தாள்கள் மொத்தம் ரூ.40,000/- ஆகமொத்தம் ரூ.90,000/- பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இத்தொகையைப்பற்றி சார்பதிவாளர் விஜயன் அவர்களிடம் விசாரிக்க அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். எனவே, சந்தேகத்தின் பேரில், நான் மேற்படி அனாமதேய பணம் ரூ.90,000/-ஐ கைப்பற்றினேன். தொடர்ந்து, அலுவலகத்தின் பின்பக்கமும், மேற்கு பக்கமுள்ள சந்திலும் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராவில் அப்பகுதியில் ஆள்நடமாட்ட பதிவுகள் ஏதேனும் உள்ளதா என்று ஆய்வு செய்வதற்காக சிஸ்டம் அட்மின் பணியை மேற்கொள்ளும் திரு.சுதர்சன் என்பவருக்கு சார் பதிவாளர் திரு.விஜயன் போன்மூலம் தகவல் சொல்லி வரவழைத்து, அவரது உதவியுடன் நாங்கள் அனைவரும் கேமராவில் பதிவான காட்சிகளை கண்காணித்தோம். அப்போதுதான்

கண்காணிப்பு கேமரா பதிவில் உள்ள கடிகாரத்தில் காண்பிக்கும் நேரம் சுமார் 25 நிமிடங்கள் தாமதமாக இருப்பதாகவும், ஆனால் அதில் பதிவான காட்சிகளில் எவ்வித மாறுபாடும் இருக்காது என்றும் திரு.சுதர்சன் எங்களிடம் தெரிவித்தார். அதன்படி மதியம் 15.00 மணி என்பது கண்காணிப்பு கேமரா பதிவில் 25 நிமிடங்கள் தாமதமாக 14.35 என்று தெரியும். தொடர்ந்து, திரு.சுதர்சன் மதியம் 15.00 மணி முதல் அலுவலகத்தின் மேற்கு பக்கமும், பின் பக்கமும் உள்ள கேமரா எண்கள் 12 மற்றும் 13 ஆகியவற்றில் பதிவான காட்சிகளை இயக்கி பார்வையிட்ட போது கணிணி நேரப்படி சுமார் 15.15 மணிக்கு, (சரியான நேரம் 15.40) அதாவது திடீர் இணை ஆய்வு தொடங்கிய 10 நிமிடத்தில், வெள்ளை வேட்டி மஞ்சள் சட்டை அணிந்த நடுத்தர வயதுடைய ஒருவர் சார்பதிவாளர் அலுவலகத்தின் மேற்கே உள்ள சந்தில் சென்று செல்போனில் பேசிக்கொண்டே தென்மேற்கு மூலையில் காம்பவுண்டு சுவரின் அருகில் மண்டியிருந்த புல் செடிகளுக்கு மத்தியில் தனது உள் டிராயரில் இருந்து பணத்தை எடுத்து தரையில் வைத்து அதன் மீது கற்களை எடுத்து வைத்தது தெளிவாக தெரிந்தது. அவர் யார் என்று விசாரித்த போது அவரது பெயர் திரு.செல்வம் என்றும், அவர் ரியல் எஸ்டேட் புரோக்கராக இருப்பதும், அவரது நண்பர்கள் திரு.ரமேஷ் மற்றும் பெரியசாமி ஆகியோர் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாகவும், இன்று அவர்கள் இருவரும் 2 ஆவணங்கள் பதிவுக்கு டோக்கன் வாங்கியிருந்ததாகவும், அவற்றில் ஒரு பத்திரப் பதிவு 2410/2026-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிலையில், மற்றொரு பத்திரப் பதிவு சர்வர் செயல்படாத காரணத்தால் இன்று பதிவாகவில்லை என்றும், அதனுடைய டோக்கன் எண் 27841 7114 / 2026 என்றும், அந்த பத்திரத்தில் மேற்படி பணத்தை புதரில் வைத்த திரு.செல்வம் மற்றும் திரு.இரவிச்சந்திரன் ஆகியோர் சாட்சி கையெழுத்து போடுவதற்கு தயாராக இருந்ததாகவும் அலுவலக ஊழியர்கள் தெரிவித்தனர். எனவே, மேற்குறிப்பிட்ட திரு.செல்வம், திரு.ரமேஸ், திரு.பெரியசாமி ஆகியோரது செல்போன் எண்களில் தொடர்பு கொண்ட போது ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட கேமரா பதிவுக் காட்சிகளை திரு.சுதர்சன் பதிவிறக்கம் செய்து ஒரு பென் டிரைவில் பதிவு செய்து ஒப்படைத்தார். மேலும், "எ" கணக்கு பட்டியலின் நகல் (1 பக்கம்), ஆன்லைன் டோக்கன் எண் TP / 27841 7 114 / 2026 (3 பக்கம்) மற்றும் பதிவு ஆவணம் 2410 / 2026 (பக்கம் 1 முதல் 32 வரை) ஆகியவற்றின் நகல்களை சார் பதிவாளர் திரு.விஜயன் அவர்கள் சான்றொப்பமிட்டு ஆஜர்படுத்த அவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. அதைத்தவிர வேறு ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும், சார் பதிவாளர் திரு.விஜயன் மற்றும் கணிணி இயக்குநர் திரு.சுதர்சன் ஆகியோர் என் முன்னிலையில் தனித்தனியாக வாக்குமூலம் அளித்தனர். திடீர் சோதனை நடவடிக்கையின் போது, பொதுமக்களுக்கோ, அலுவலக ஆவணங்களுக்கோ, அலுவலர்களுக்கோ எந்தவித சேதாரமும், தொந்தரவுமின்றி நடத்தி முடிக்கப்பட்டது. தொடர்ந்து, காவல் துணை கண்காணிப்பாளர் அறிவுரையின் பேரில் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட மடிக்கணிணி மற்றும் பிரிண்டர்

மூலம் சுமார் 16.00 மணி முதல் இரவு சுமார் 20.45 மணி வரை த.கா. 2557 திரு.ராமமூர்த்தி அவர்களால் செயல்முறை நடவடிக்கைகள் தட்டச்சு செய்து தயார் செய்யப்பட்டது. அதில் நானும், சார் பதிவாளர் திரு.விஜயன், கணிணி இயக்குநர் திரு.சுதர்சன், காவல் ஆய்வாளர் செல்வி. தங்கமணி, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அம்புரோஸ் ஜெயராஜா ஆகியோர் கையெழுத்திட்டோம். எனவே, திடீர் இணை ஆய்வின் போது குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட அனாமதேயப் பணம் ரூ.90,000/-, மேற்குறிப்பிட்ட கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பென் டிரைவ் ஆகியவற்றை மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/-(xxxxxxxx) திரு.பெ.மணிவண்ணன், தனி வட்டாட்சியர் (நி.எ.), நெடுஞ்சாலைகள் யூனிட் 3, கரூர் மாவட்டம் நாள்: 04.06.2026.

Sir, Received the computer typed complaint on 04.06.2026 at about 23.00 hrs, after getting suitable instructions from the superior officers and law officers of DVAC, Chennai, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr. No. 03 / AC / 2026 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 of BNSS, 2023 at 15.30 hrs on 10.06.2026. Sd/- (xxxxxxxx) 10.06.2026. A.Ambrose Jayaraja, Deputy Superintendent of Police, V&AC, Karur.

Original FIR along with the original complaint of Tr.P.Manivannan, Special Thasildar (L.A.), National Highways, Karur are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

10/06/2026

(A.Ambrose Jayaraja)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.